## அலகு தேர்வு 1

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு------ கணக்குப்பதிவியல்

## பாடம் – 1 . முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

**காலம் : 75 நிமிடம்** **மதிப்பெண்கள் : 50**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **10 × 1 = 10**

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. முழுமைபெறா பதிவேட்டு முறை என்பது ------------ நிறுவனங்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப மாற்றியமைத்து பயன்படுத்தும் குறைபாடுள்ள மற்றும் அறிவியல் தன்மையற்ற ஒரு முறையாகும்.
   அ) அரசு ஆ) தனியாள் வணிகம் இ) கூட்டாண்மை ஈ) ஆ மற்றும் இ
2. நிலை அறிக்கை முறை --------- முறை எனவும் அழைக்கப்படும்.
   அ) மாற்றுதல் ஆ) நிகர மதிப்பு இ) இருப்புநிலைக் குறிப்பு ஈ) ஒற்றைப்பதிவு
3. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
4. ஒற்றைப்பதிவு முறையில் --------- கணக்கு மற்றும் பெயரளவு கணக்குகள் பராமரிக்கப்படுவது இல்லை.
   அ) ஆள்சார் ஆ) ரொக்க இ) சொத்து ஈ) கடனீந்தோர்
5. முழுமைபெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?
   அ) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை
   ஆ) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது.
   இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்
   ஈ) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை.
6. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்த சொத்துகள் ₹. 42,000. அவருடைய பொறுப்புகள் ₹.15,500. அவருடைய முதல் ----------- ஆகும்.
   அ) ₹. 17,500 ஆ) ₹. 27,000 இ) ₹. 27,500 ஈ) ₹. 26,500
7. மொத்த விற்பனை விலை ₹. 3,70,000. ரொக்க விற்பனை ₹. 2, 65,150. எனில் கடன் விற்பனை ₹. ---------------
   அ) ₹. 1,05,150 ஆ) ₹. 1,04,850 இ) ₹. 1,05,850 ஈ) ₹. 1,03,850
8. சரியான கூற்று எது?
   அ) முழுமை பெறா பதிவேடுகள் சொத்துக் கணக்குகள் மற்றும் பெயரளவுக் கணக்குகளை முறையாகப் பராமரிக்கிறது.
   ஆ) இருப்புநிலைக் குறிப்பு, முழுமை பெறா பதிவேடுகளைக் கொண்டு தயாரிக்கப்படுவதால், நம்பகத்தன்மை உடையது.
   இ) நிலை அறிக்கை, வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது.
   ஈ) இறுதி முதலுக்கும் மற்றும் தொடக்க முதலுக்கும் இடையே உள்ள வேறுபாடு வியாபாரத்தின் இலாபம் அல்லது நட்டமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.
9. நிலை அறிக்கை ஒரு -----------
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு



10. பொருத்துக
    1. நிலையறிக்கை முறை --- a. பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது
    2. இருப்புநிலை குறிப்பு ---- b. அறிவியல் தன்மையற்றது
    3. இரட்டைப்பதிவு முறை --- c. முதல் ஒப்பிட்டு முறை
    4. முழுமைபெறா பதிவேடுகள்--- d. அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தக்கூடியது

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | d | a | c | b |
| ஆ. | b | c | d | a |
| இ. | c | a | d | b |
| ஈ. | a | b | c | d |

## பகுதி --- II

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 11- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **5 × 2 = 10**

11. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.
12. முழுமைபெறா பதிவேடுகளின் இயல்புகளில் இரண்டினை குறிப்பிடுக.
13. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடுக.
    தொடக்க முதல் ₹. 24,000 ; எடுப்பு ₹. 25,200 ; இறுதிமுதல் ₹. 13,000 ; கூடுதல் முதல் ₹.42,000
14. பின் வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவல்களை காண்க :
    எடுப்புகள் ₹. 30,000 ; இறுதிமுதல் ₹. 7,000 ; தொடக்க முதல் ₹. 7,000
15. கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டு தொடக்க முதலைக் காண்க.

| விவரம் | 31.03.2002<br>₹ | 31.03.2003<br>₹ |
|---|---|---|
| கை ரொக்கம் | 4,000 | 6,000 |
| வங்கி ரொக்கம் | 2.000 | 4,000 |
| சரக்கிருப்பு | 24,000 | 24,000 |
| அறைகலன் | 6,000 | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | 10,000 | 15,000 |

16. பின்வரும் விவரங்களிலிருந்து, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கினைத் தயாரித்து, கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டினைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்க பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 42,000 |
| இறுதி பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 63,000 |
| மாற்றுச்சீட்டிற்கான ரொக்கம் பெற்றது | 90,000 |
| பெறுதற்குறிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 7,000 |

17. முழுமைபெறா பதிவேடுகளிலிருந்து கடன்விற்பனைத் தொகை எவ்வாறு கண்டறியப்படுகிறது?

# பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

18. நிலை அறிக்கை என்றால் என்ன ?

19. அரசு மற்றும் வரி அதிகாரிகள் முழுமைபெறா பதிவேடுகளிலிருந்து தயாரிக்கப்படும் கணக்குகளை ஏற்றுக் கொள்வதில்லை. ஏன்?

20. பின்வரும் விவரங்களிலிருந்து, 2018 டிசம்பர் 31 ஆம் நாளைய முதலை கண்டறியவும்

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| 01.01.2018 அன்று முதல் | 1,00,000 | அவ்வாண்டில் இலாபம் | 60,000 |
| நிதியாண்டில் எடுப்பு | 30,000 | நிதியாண்டில் கூடுதல் முதல் | 15,000 |

21. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும் :

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனாளிகள் (தொடக்க இருப்பு) | 25,000 | பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 23,000 |
| விற்பனைத் திருப்பம் | 2,200 | பற்பல கடனாளிகள் (இறுதி இருப்பு) | 3,500 |

22. திரு. மாதவன் அவர்கள் ₹. 1,20,000 முதலுடன் 1.4.2015 அன்று தொழில் தொடங்கினார். அவர் ஒவ்வொரு மாதமும் ₹. 1,000 வீதம் தன் சொந்த செலவிற்கு எடுத்துக் கொண்டார். மேலும் அவர் ₹. 20,000 கூடுதல் முதலாக இட்டார். 31.03.2016 அன்று நிறுவனத்தின் முதல் ₹. 1,16,500 என்றானது. மேற்கண்ட விவரங்களிலிருந்து, நிறுவனம் இலாபம் அடைந்ததா அல்லது நட்டம் அடைந்ததா என்பதனைக் கண்டறியவும்.

23. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு மொத்தக் கொள்முதலைக் காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் (தொடக்கம்) | 1,50,000 | பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 45,000 |
| பெற்ற தள்ளுபடி | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| பற்பல கடனீந்தோர் ( இறுதி ) | 1,80,000 | ரொக்க கொள்முதல் | 80,000 |



24. கீழ்கண்ட விவரங்களிலிருந்து, விடுபட்டதொகையினை கண்டுபிடித்து, முழுமையான பதிவினை தரவும்.

**பெறுதற்குறிய மாற்றுச்சீட்டுக் கணக்கு**

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| இருப்பு கீ/ கொ | 30,000 | ரொக்க க/கு | 60,000 |
| கடனாளிகள் க/கு ( மாற்றுச்சீட்டு பெற்றது - இருப்புகட்டும் தொகை) | -------- | கடனாளிகள் க/கு (பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது ) | 4,000 |
| | | இருப்பு கீ/ இ | 8,000 |
| மொத்தம் | -------- | | ----------- |

**மொத்தக் கடனாளிகள் கணக்கு**

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| இருப்பு கீ/ கொ | 2,40,000 | ரொக்க க/கு ( பெற்றது) | 6,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ( மறுக்கப்பட்டது) | -------- | அளித்த தள்ளுபடி க/கு | 25,000 |
| விற்பனை க/கு ( கடன் ) ( இருப்புகட்டும் தொகை) | ------- | வாராகடன் க/கு | -------- |
| | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ( மாற்றுச்சீட்டு பெற்றது ) | 42,000 |
| | | இருப்பு கீ/ இ | 2,20,000 |
| | 9,03,000 | | 9,03,000 |

# பகுதி --- IV

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும். 3 × 5 = 15

25. திரு. கார்த்திக் தன் கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரித்து வருவதில்லை. 31.03.2017 மற்றும் 31.3.2018 ஆகிய நாட்களில் அவரது சொத்துகளும், பொறுப்புகளும் கீழ்க்கண்டவாறு இருந்தன :

| விவரம் | 31.03.2017 ₹ | 31.03.2018 ₹ |
|---|---|---|
| கைரொக்கம் | 5,000 | 60,000 |
| வங்கி ரொக்கம் | 15,000 ( வ) | 7,000 ( ப ) |
| பற்பல கடனாளிகள் | 75.000 | 1,00,000 |
| சரக்கிருப்பு | 35,000 | 24,000 |
| அறைகலன் | 15,000 | 50,000 |
| பற்பல கடனீந்தோர் | 45,000 | 30,000 |

அவர் அவ்வாண்டில் ₹.15,000 கூடுதல் முதல் இட்டார். அவர் தனது சொந்த செலவுக்காக ₹.35,000 திரும்ப எடுத்துக் கொண்டார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்கவும். மேலும்

அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்கவும். 2017 - 18 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

26. தேவையான கணக்குகள் தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 2,50,000 | கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 7,25,000 |
| தொடக்க பற்பல கடனீந்தோர் | 30,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குரிய ரொக்கம் செலுத்தியது | 30,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 | 2018, ஜனவரி 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 |
| வெளித் திருப்பம் | 15,000 | உள்திருப்பம் | 50,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | 2,40,000 | இறுதி பற்பல கடனீந்தோர் | 25,000 |
| ரொக்க விற்பனை | 3,15,000 | ரொக்கக் கொள்முதல் | 2,25,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | 2018, டிசம்பர் 31 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் பெற்றது | 1,60,000 | வராகடன் | 30,000 |

27. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கடனாளிகள் கணக்கு, மொத்தக் கடனீந்தோர் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரித்து கடன்விற்பனை மற்றும் கடன்கொள்முதலை கண்டறியவும்.

| விவரம் | தொடக்க இருப்பு ₹ | இறுதி இருப்பு ₹ |
|---|---|---|
| கடனாளிகள் | 42,000 | 25,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 25.000 | 75,000 |
| கடனீந்தோர் | 20,000 | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 5,000 | 6,000 |



**மற்ற விவரங்கள்** :

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| சரக்களித்தோர் வழங்கிய தள்ளுபடி | 5,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குரிய ரொக்கம் செலுத்தியது | 50,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 65,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்கான ரொக்கம் பெற்றது | 3,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 40,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 5,000 |
| வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி | 10,000 | வாராக்கடன் | 6,000 |

28. திரு. செல்வம் 01.4.2015 அன்று ₹. 80, 000 முதல் வைத்து வியாபாரத்தை தொடங்கினார். கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு 31.03.2016 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்குகளை தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| கடனாளிகள் | 60,000 | தொடக்கச் சரக்கிருப்பு | 28,000 |
| கடனீந்தோர் | 16,000 | விற்பனை | 75,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 4,700 | விற்பனை மீதான தூக்கு கூலி | 1,400 |
| கொள்முதல் மீதான தூக்கு கூலி | 4,000 | கைரொக்கம் | 38,000 |
| சம்பளம் | 5,000 | அலுவலக வாடகை | 13,000 |
| கூடுதல் முதல் | 7,000 | எடுப்புகள் | 5,000 |
| கொள்முதல் | 20,000 | கழிவு பெற்றது | 1,100 |

**சரிக்கட்டுதல்கள்** : 1. கடனாளிகள் மீது வட்டி 1% ஐயக்கடன் உருவாக்கவும்.

2. இறுதிச் சரக்கிருப்பு ₹. 11,000